©
GOVERNMENT OF TAMIL NADU
2026

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No.197/2009.
[Price: Rs. 4.00 Paise.

தமிழ்நாடு அரசிதழ்

சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 370A] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 2, 2026
ஆவணி 16, பராபவ, திருவள்ளுவர் ஆண்டு–2057

பகுதி IV—பிரிவு 1

தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 16/2026

2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்தியேழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் (திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டத்தின் (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படும்) 2 ஆம் பிரிவில்,– தமிழ்நாடு சட்டம் 7/2018.

(i) (c) கூறிற்கு பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(cc) "ஆணையம்" என்பது, 16–A பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்பு ஆணையம்" என்று பொருள்படும்;

(ii) (u) கூறில், (vi) உட்கூறிற்கு பின்பு, பின்வரும் உட்கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(vii) தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்பு ஆணையம்;";

(iii) அவ்வாறு திருத்தம் செய்யப்பட்டவாறான (u) கூறிற்கு பின்பு, பின்வரும் கூறுகளானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அவையாவன:–

"(uu) "இணைப்புப் பட்டியல்" என்பது, இச்சட்டத்துடன் இணைக்கப்பட்ட இணைப்புப் பட்டியல்" என்று பொருள்படும்;

(uuu) "பட்டியலிடப்பட்ட இயற்றுச் சட்டங்கள்" என்பது, இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள் என்று பொருள்படும்;

(iv) (w) கூறிற்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(w) "ஒற்றைச் சாளர வலைவாயில்" என்பது, ஒருங்கிணைப்பு முகமையால் உருவாக்கப்பட்டு, பேணப்பட்டு வரும் வலைவாயில் முகவரி என்று பொருள்படும்; அதன் மின்னணு முகவரியானது, அரசால் அறிவிக்கை செய்யப்படுதல் வேண்டும்;

(v) (x) கூறிற்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(x) "துணைச் சட்டம்" என்பது, விதி, துணை விதி, ஒழுங்குமுறைவிதி, அரசாணை, அறிவிக்கை, அலுவலக ஆணை, நிலையாணை, சட்டப்பூர்வ அறிவுறுத்தல் அல்லது பட்டியலிடப்பட்ட இயற்றுச் சட்டம் அல்லது மையச் சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட நடவடிக்கை குறிப்பு என்று பொருள்படும்.".

7 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவில், பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"வரம்புரையாக, ஒற்றைச் சாளர வலைவாயிலைத் தவிர, வேறு எந்த இணைய வலைவாயில் வாயிலாகவும் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பமும் செயலாக்கத்திற்காக எடுத்துக்கொள்ளப்படமாட்டாது."

9 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ii) கூறில், "மாநில இயற்றுச் சட்டங்கள்" எனும் சொற்களுக்காக, "பட்டியலிடப்பட்ட இயற்றுச் சட்டங்கள்" எனும் சொற்களானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

10 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "விதிகள்" எனும் சொல்லுக்காக, "அரசால் அல்லது மைய அரசால் அதன்கீழ் இயற்றப்பட்ட துணைச் சட்டங்கள்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

11 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

6. முதன்மைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"11. விண்ணப்பங்களின் செயல்முறைக்கான காலவரம்பு மற்றும் செயல்முறை.–

(1) பட்டியலிடப்பட்ட எந்தவொரு சட்டத்திலோ அல்லது இயற்றப்பட்ட எந்தவொரு துணைச் சட்டத்திலோ அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் அனுமதிக்கான காலவரம்பு இருபத்தொரு நாட்களுக்கு மேல் நிர்ணயிக்கப்பட்டிருந்தாலோ அல்லது அத்தகைய காலவரம்பு எதுவும் நிர்ணயிக்கப்படாமலிருந்தாலோ, அத்தகைய காலவரம்பு இருபத்தொரு நாட்களாகக் குறைக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

வரம்புரையாக, இயற்றப்பட்ட எந்தவொரு துணைச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், கோரப்பட்டுள்ள அனுமதிகளில் ஏதேனும் ஒன்றிற்கு இறுதி ஆணை பிறப்பிப்பதற்கான குறுகிய காலவரம்பை இந்தச் சட்டத்தின்கீழ் அரசு நிர்ணயிக்கலாம்:

மேலும் வரம்புரையாக, இந்த உட்பிரிவின்கீழ் இருபத்தொரு நாட்களாகக் குறைக்கப்பட்ட காலவரம்பைக் கணக்கிடும்போது, அரசால் அறிவிக்கப்படும் பொது விடுமுறை நாட்கள் மற்றும் உள்ளூர் விடுமுறை நாட்கள் உள்ளிட்ட விடுமுறை நாட்களை கணக்கில் எடுத்துக்கொள்ளுதல் கூடாது.

(2) (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், பட்டியலிடப்பட்ட எந்தவொரு இயற்றுச் சட்டத்திலோ அல்லது இயற்றப்பட்ட துணைச் சட்டத்திலோ இருபத்தொரு நாட்களுக்கு மிகாத காலவரம்பு நிர்ணயிக்கப்பட்டிருந்தால், அத்தகைய காலவரம்பு தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

(3) (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட எந்தவொரு மையச் சட்டத்தில் ஏதேனும் அனுமதிக்காக இருபத்தொரு நாட்களுக்கு மேற்பட்ட காலவரம்பு நிர்ணயிக்கப்பட்டிருந்தால், அத்தகைய அனுமதியைத் தீர்மானிப்பதற்கு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் குறிப்பிடப்பட்ட அல்லது நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பை விட, நீண்ட காலவரம்பே மேலோங்கி நடைமுறையில் இருக்கும்.

(4) பட்டியலிடப்பட்ட எந்தவொரு சட்டத்திலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, அரசு பின்வருவனவற்றை நிர்ணயிக்கலாம்:–

(a) அதன்கீழ் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களைப் பரிசீலித்தல் மற்றும் அவற்றை முடிவு செய்வதற்கான நடைமுறை; மற்றும்

(b) அதன்கீழ் தொடர்புடைய அதிகார அமைப்பினால் எழுப்பப்படும் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கும், கோரப்படும் கூடுதல் விவரங்களைச் சமர்ப்பிப்பதற்குமான காலவரம்பு.

(5) அனைத்து தேவையான ஆவணங்களுடனும் முழுமையான விவரங்களுடனும் கூடிய விண்ணப்பம் பெறப்பட்டவுடன், அத்தகைய அனுமதியைக் கோரி விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து, நேர்விற்கேற்ப, (1), (2) அல்லது (3) ஆம் உட்பிரிவுகளின்கீழ் பொருந்தக்கூடிய காலவரம்பிற்குள், கோரப்பட்ட அனுமதி தொடர்பாக, தகுதிவாய்ந்த அதிகார அமைப்பானது ஆணைகளைப் பிறப்பித்தல் வேண்டும்.

(6) ஏதேனும் அனுமதியைக் கோரி அளிக்கப்பட்ட விண்ணப்பம் அனைத்து வகையிலும் முழுமையாக இல்லாதிருந்தால், மேலும் 8 ஆம் பிரிவின்கீழ் கூடுதல் தகவல்கள் கோரப்பட்டிருந்தால், அந்தக் கூடுதல் தகவல்கள் பெறப்பட்ட நாளிலிருந்து, நேர்விற்கேற்ப, (1), (2) அல்லது (3) ஆம் உட்பிரிவுகளின்கீழ் பொருந்தக்கூடிய காலவரம்பிற்குள், தகுதிவாய்ந்த அதிகார அமைப்பானது அந்த விண்ணப்பத்தின் பேரில் ஆணை பிறப்பித்தல் வேண்டும்.''

15 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

7. முதன்மைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (i) கூறில், ''வகுத்துரைக்கப்பட்ட நடைமுறை'' எனும் சொற்களுக்காக, ''மாநில ஒற்றைச் சாளர குழுவினால் விதிமுறைகள் மூலம் பரிந்துரைக்கப்படும் நடைமுறை'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

16 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

8. முதன்மைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (i) கூறில், ''வகுத்துரைக்கப்பட்ட நடைமுறை'' எனும் சொற்களுக்காக, ''மாநில ஒற்றைச் சாளர கண்காணிப்பு குழுவினால் விதிமுறைகள் மூலம் பரிந்துரைக்கப்படும் நடைமுறை'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

16–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

9. முதன்மைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"16-A. தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்பு ஆணையத்தின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள்.—

(1) அரசு, அறிவிக்கையின் மூலம், தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்பு ஆணையத்தை அமைத்தல் வேண்டும். இவ்வாணையத்தின் தலைவராக, அரசு தலைமைச் செயலாளரும், உறுப்பினர்–ஒருங்கிணைப்பாளராக தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அரசுச் செயலாளரும் இருப்பார்கள். மேலும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், அரசால் நியமிக்கப்படும் இருபதுக்கும் மிகாத எண்ணிக்கையிலான பிற உறுப்பினர்களும் ஆணையத்தில் இடம்பெறுவர்.

(2) உறுப்பினர்–ஒருங்கிணைப்பாளர், முதலீட்டு ஊக்குவிப்பு, தொழில், வர்த்தகம் அல்லது பிற தொடர்புடைய துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களை, ஒரே நேரத்தில் ஐந்து பேருக்கு மிகாமல், சிறப்பு அழைப்பாளர்களாக ஆணையத்தின் கூட்டத்தில் கலந்துகொள்ள அழைக்கலாம். ஆனால், அத்தகைய சிறப்பு அழைப்பாளர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருக்காது.

(3) ஆணையம், பின்வரும் அதிகாரங்களைச் செலுத்துதலும், பின்வரும் பணிகளைப் புரிதலும் வேண்டும், அவையாவன:—

(a) மாநிலத்தில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வசதிகளை ஏற்படுத்துதல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும், திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும், ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும் ஆலோசனை வழங்குதல், அவற்றைக் கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகியவற்றுக்கான உயர்நிலை சிறப்பு அமைப்பாக செயல்படுதல்; அத்தகைய, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வசதிகளை ஏற்படுத்துதல் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து முகமைகளின் செயல்பாடுகளையும் கண்காணித்து ஆய்வு செய்தல்.

(b) இருநூறு கோடி ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட மூலதன முதலீட்டை உள்ளடக்கிய முதலீடுகள், ஐந்தாயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படும் முதலீடுகள், தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய முதலீடுகள், இந்தியாவிற்கு வெளியே வசிக்கும் தமிழ்வம்சாவளியினரின் முதலீடுகள், மற்றும் அரசு அறிவிக்கை மூலம் குறிப்பிடும் பிற முதலீடுகள் ஆகியவற்றை அதிக அளவிலான, முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முதலீடுகளின் திட்டநிலை மற்றும் முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்;

(c) அத்தகைய முதலீடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு, செயல்பாடுகள் தொடங்கும் நிலை வரையிலான முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்; மேலும், முதலீடுகளுக்குத் தேவையான அனுமதிகள், ஊக்கத்தொகைகள் மற்றும் பிற ஒப்புதல்களை உரிய காலத்தில் வழங்குவதற்காக, ஒருங்கிணைப்பு முகமை, தொடர்புடைய குழுக்கள், தகுதிவாய்ந்த அதிகார அமைப்புகள் மற்றும் தொடர்புடைய துறைகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்குதல்; அவ்வாறு வழங்கப்படும் வழிகாட்டுதல்கள் எவருக்கு வழங்கப்படுகின்றனவோ அந்த அதிகாரம், முகமை அல்லது துறைக்கு கட்டுப்பட்டவையாக இருக்கும்;

(d) தற்போது செயல்பட்டு வரும் தொழில் அலகுகளின் குறிப்பிடத்தக்க விரிவாக்கம் மற்றும் மறுமுதலீட்டை ஆய்வு செய்து, அதனை எளிதாக்குதல்;

(e) வணிகச் செயல்பாடுகளைத் தொடங்காத திட்டங்களுக்காக, தமிழ்நாடு தொழில் முன்னேற்று நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மற்றும் தொழில் நிலங்களை மேம்படுத்துதல் அல்லது ஒதுக்கீடு செய்தல் தொடர்பான பணிகளில் ஈடுபட்டுள்ள அரசின் பிற முகமைகள் ஆகியவற்றால் ஒதுக்கப்பட்ட தொழில் நிலங்களின் ஒதுக்கீடு மற்றும் பயன்பாட்டை ஆய்வு செய்தல்; மேலும், அத்தகைய நிலங்களின் ஒதுக்கீட்டில் வெளிப்படைத்தன்மையையும், அவற்றைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதையும் உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்;

(f) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், டைடல் பூங்கா நிறுவனம், டைசல் உயிரி தொழில்நுட்ப பூங்கா நிறுவனம் மற்றும் பிற தொடர்புடைய முகமைகள் மேற்கொள்ளும் முதலீடுகள் மற்றும் திட்டங்களைத் தொடர்ந்து கண்காணித்து ஆய்வு செய்தல்; அவற்றின் செயலாக்கம், விளைவுகள் மற்றும் மாநிலத்தின் முதலீட்டு முன்னுரிமைகளுடனான இணக்கம் ஆகியவற்றையும் ஆய்வு செய்தல்;

(g) முதலீடுகளுக்குத் தடையாக உள்ள அமைப்பு ரீதியான சிக்கல்களைக் கண்டறிந்து, மாநிலத்தில் முதலீட்டுச் சூழலையும், தொழில் தொடங்கி நடத்துவதற்கான எளிமையையும் மேம்படுத்துவதற்கான கொள்கை, ஒழுங்குமுறை மற்றும் நடைமுறை சார்ந்த நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்; மேலும், இச்சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட ஒற்றைச் சாளர முறையுடன் தொடர்புடைய இந்திய அரசின் செயல்பாடுகளைச் செயல்படுத்துவதை எளிதாக்குதல், ஒருங்கிணைத்தல் மற்றும் அவற்றைக் கண்காணித்தல்;

(h) இச்சட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட காலவரம்புகளுக்குள் ஒழுங்குமுறை விதிகளைப் பின்பற்றுவதை எளிதாக்கும் வகையில், சுயசான்றிதழ் அளித்தல், அங்கீகரிக்கப்பட்ட முகமைகள் மூலம் மூன்றாம் தரப்புச் சான்றிதழ் அளித்தல் மற்றும் அரசு அங்கீகரிக்கும் மின்னணு ஆவணக் களஞ்சியங்கள் போன்ற வணிகச் செயல்முறை மறுசீரமைப்பு நடைமுறைகளை அவ்வப்போது பரிந்துரைத்தல்;

(i) மாநிலத்தில் உள்ள தொழிற்பேட்டைகள் மற்றும் தொழில் நகரியங்களை நிர்வகிப்பது தொடர்பான சட்டங்களை ஆய்வு செய்து, அவற்றைச் சிறப்பாக நிர்வகிப்பதற்காக, அதிகாரங்களைப் பரவலாக்குதல் அல்லது அதிகாரத்தை ஒப்படைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மறுஆய்வு செய்தல்;

(j) இச்சட்டத்தின் வகைமுறைகளும் அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளும் நடைமுறைப்படுத்தப்படுவதை அவ்வப்போது மறு ஆய்வு செய்து கண்காணித்தல்; மற்றும்

(k) மாநிலத்தில் முதலீட்டை ஊக்குவித்தல், முதலீடுகளை எளிதாக்குதல் மற்றும் முதலீட்டுச் சூழல் ஆகியவை தொடர்பாக, அரசு ஒப்படைக்கும் பிற பணிகளை மேற்கொள்ளுதல்.

(4) ஆணையமானது, அத்தகைய நேரத்தில் கூட வேண்டும் மற்றும் அதன் கூட்டங்களில் குறைந்தபட்ச உறுப்பினர்கள் எண்ணிக்கை உள்ளடங்கலாக, ஆணையத்தால் ஒழுங்குமுறைவிதிகள் மூலம் பரிந்துரைக்கப்படலாகிற அலுவல்கள் மேற்கொள்வது தொடர்பான நடைமுறைகளின் அத்தகைய விதிகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

17 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

10. முதன்மைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (i) கூறில், ''வகுத்துரைக்கப்பட்ட நடைமுறை'' எனும் சொற்களுக்காக, ''முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் கண்காணிப்பு வாரியத்தால் விதிமுறைகளின் மூலம் பரிந்துரைக்கப்படும் நடைமுறை'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

18, 19, 20, 24, 25, 26 மற்றும் 31 ஆம் பிரிவுகளுக்கான திருத்தம்.

11. முதன்மைச் சட்டத்தின் 18, 19, 20, 24, 25, 26 மற்றும் 31 ஆம் பிரிவுகளில், ''மாநில சட்டம்'' எனும் சொற்களுக்காக, அவை காணப்படுகின்ற இடங்களில் எல்லாம் ''பட்டியலிடப்பட்ட இயற்றுச் சட்டம் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட எந்தவொரு துணைச் சட்டம்'' எனும் சொற்களானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

12. முதன்மைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (i) கூறில், "வகுத்துரைக்கப்பட்ட நடைமுறை" எனும் சொற்களுக்காக, "குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மாவட்ட ஒற்றை சாளர குழுவினால் விதிமுறைகள் மூலம் பரிந்துரைக்கப்படும் நடைமுறை" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். — 21 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

13. முதன்மைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (i) கூறில், "வகுத்துரைக்கப்பட்ட நடைமுறை" எனும் சொற்களுக்காக, "குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மாநில ஒற்றை சாளர குழுவினால் விதிமுறைகள் மூலம் பரிந்துரைக்கப்படும் நடைமுறை" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். — 22 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

14. முதன்மைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (i) கூறில், "வகுத்துரைக்கப்பட்ட நடைமுறை" எனும் சொற்களுக்காக, "குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் கண்காணிப்பு வாரியத்தால் விதிமுறைகள் மூலம் பரிந்துரைக்கப்படும் நடைமுறை" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். — 23 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

15. முதன்மைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவுகளானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அவையாவன:– — 33–A மற்றும் 33–B ஆகிய புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

"**33-A. ஒழுங்குமுறை விதிகளை இயற்றுவதற்கான அதிகாரம்.**— தொடர்புடைய குழுக்களானது, இச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒழுங்குமுறை விதிகளை, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கும், அதன்கீழ் செய்யப்படும் விதிகளுக்கும் முரண்படாத வகையில், அரசின் முன் அனுமதியுடன் இயற்றலாம்.

33-B. இணைப்புப் பட்டியலைத் திருத்துவதற்கான அதிகாரம்.— அரசு, அறிவிக்கை மூலம், இணைப்புப் பட்டியலில் மாற்றம் செய்யலாம், அதனைத் திருத்தலாம், அதில் புதிய பதிவுகளைச் சேர்க்கலாம் அல்லது இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவுகளில் ஏதேனும் ஒன்றை நீக்கலாம். அவ்வாறு அறிவிக்கை வெளியிடப்பட்டவுடன், அதற்கேற்ப இணைப்புப் பட்டியல் திருத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

16. முதன்மைச் சட்டத்தின் 35 ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் இணைப்புப் பட்டியலானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:– — இணைப்புப் பட்டியலைச் சேர்த்தல்.

பிற்சேர்க்கை

இணைப்புப் பட்டியல்

[2 ஆம் பிரிவின் (ப) மற்றும் (பப) ஆகிய கூறுகளைக் காண்க]

வ.எண்	சட்டம்
1	1882 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1882)
2	1923 ஆம் ஆண்டு தமிழ்நாடு நில அளவை மற்றும் எல்லைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் VIII/1923)
3	1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் X/1937)
4	1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நலச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் III/1939)
5	1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டம் (தமிழ்நாடு சட்டம் IX/1955)
6	1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் XIII/1958)
7	1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (நில உச்சவரம்பு நிர்ணயம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/1961)
8	1965 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 13/1965)
9	1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 4/1971)
10	1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/1972)
11	1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுசெய்தல் சட்டம். (தமிழ்நாடு சட்டம் 27/1975)
12	1978 ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 28/1978)
13	1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு பட்டா கணக்கு புத்தகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 4/1986)
14	1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/1994)
15	1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 4/1997)
16	1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் மற்றும் நகரும் படிக்கட்டுகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/1997)
17	1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நகரியப் பகுதி மேம்பட்டு அதிகார அமைப்பு சட்டம் (தமிழ்நாடு சட்டம் 33/1997)
18	1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 9/1999)
19	2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/2003)
20	2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம். (தமிழ்நாடு சட்டம் 32/2006)
21	2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 18/2014)
22	2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 37/2025)

நோக்கக் காரண விளக்கவுரை

2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2018) முதன்மை நோக்கமானது, சீரமைக்கப்பட்ட, வெளிப்படையான மற்றும் காலக்கெடுவிற்கு உட்பட்ட ஒழுங்குமுறை அனுமதி செயல்முறைகளை வழங்குவதன் மூலம், மாநிலத்தை முதலீட்டிற்கு உகந்த ஒரு முன்னுரிமை இடமாக நிலைநிறுத்தி, வணிகம் செய்வதை எளிதாக்கும் சூழலை மேம்படுத்துவதாகும். 2036 ஆம் ஆண்டிற்குள் மாநிலத்தின் பொருளாதாரம் 1.5 டிரில்லியன் டாலர் அளவை எட்டும் வகையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கை அடைவதற்காக, கூறப்பட்ட சட்டத்தின்படி நிறுவனக் கட்டமைப்பை வலுப்படுத்தவும், மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் உயர் மதிப்புடைய மற்றும் நுண்திறமுடைய முதலீடுகளை எளிதாக்கவும், ஒருங்கிணைக்கவும், கண்காணிக்கவும் தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்பு ஆணையத்தை அமைப்பது அவசியமாகிறது. இந்த நோக்கத்தை அடைவதற்காக, தமிழ்நாடு சட்டம் 7/2018 இல் உரிய திருத்தங்களை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல்வடிவம் அளிக்க விழைகிறது.

ச. கீர்த்தனா,
தொழில்துறை அமைச்சர்.

சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.

இந்தச் சட்டமுன்வடிவின் 2, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14 மற்றும் 15 ஆம் கூறுகளானவை குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக நேர்விற்கேற்ப, அறிவிக்கைகளை வெளியிடுவதற்கு அல்லது ஆணைகள் பிறப்பிப்பதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

ச. கீர்த்தனா,
தொழில்துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2026 செப்டம்பர் 2.

இரா. சாந்தி,
செயலாளர்.

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.